OS.No. 141/2022
Date : 07.04.2025
Witness Name & Rank – யுவராஜ் – PW1

சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தறி தொழில் செய்து வருகிறேன். எத்தனை தறி வைத்துள்ளேன் என்றால் 16 தறி வைத்துள்ளேன். சுமாராக எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் ஒரு முப்பதாயிரம் வரும். மேற்படி பிரதிவாதிகளை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் செய்து வரும் தறி தொழிலில் இலை போடுவதற்கு வந்த வகையில் பழக்கம். பிரதிவாதிக்கு சொந்தமாக வீடு உள்ளதா என்றால் சொந்த வீடு உள்ளது அதை விற்று எனக்கு பணம் தருவதாக சொன்னார்கள் அண்ணன் தம்பி இருவருக்கும் அந்த சொத்து இருப்பதாக சொன்னார்கள். மேற்படி வீட்டை விற்று விட்டதாக கேள்விப்பட்டேன் ஆனால் எனக்கு பணம் பைசல் செய்யவில்லை. இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எனக்கும் பிரதிவாதிகளுக்கும் வேறு பரிவர்த்தனை உள்ளதா என்றால் இல்லை அவர்கள் பார்த்த வேலைக்கு நான் உரிய சம்பளம் கொடுத்து விட்டேன். பிரதிவாதி என்னிடம் வேலை பார்த்ததாக அதற்கு நான் சம்பளம் கொடுத்து வந்ததாகவோ இந்த வழக்கு பிராதில் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.
2. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகள் என்னிடம் வீடு விற்பனை செய்தவுடன் பெற்ற கடனை தருவதாக சொன்னார்கள் அவ்வாறு தரவில்லை எனவே பணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரதிவாதிகள் வீடு விற்பனை செய்தவுடன் பணத்தை திருப்பி தருவதாக நான் சொல்லி உள்ளதாக சங்கதி எனது பிராதிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். எனக்கு எனது பேரில் சொந்தமாக வீடு பூமி உள்ளது என்றால் சரிதான். எனக்கு பொதுவாக கடனுறுதி சீட்டுக்கும் கடன் ஆவணத்திற்கும் உள்ள வேறுபாடு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக கடன் உறுதி சீட்டில் கடன் வாங்குபவரின் கையொப்பம் மட்டும் இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக பத்திரத்தில் யார் விற்பவர் யார் வாங்குபவர் என்ற இருவரின் கையொப்பமும் இருப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கடன் பத்திரத்தில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எனது பிராதிலும் முதல் விசாரணையிலும் பிரதிவாதிகள் எப்போது எங்கு வைத்து கடன் கேட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது வீட்டில் வைத்து கடன் கேட்டார்கள். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி சங்கதி எனது பிராதில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கடன் பத்திரம் தமிழக அரசு முத்திரைத்தாள் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. நான் யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுத்ததில்லை என்றால் இல்லை கடனாக பிரதிவாதிக்கும் அவரது

நண்பருக்கும் மட்டும் கொடுத்துள்ளேன். பொதுவாக ஒரு பத்திரத்தில் சங்கதிகள் முடிந்த பிறகு சாட்சிகள் கையொப்பம் இருக்கும் என்றால் சரிதான்.

3. ஆனால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1ல் கடன் பத்திரத்தில் முதல் பக்கத்தில் சாட்சி கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு கடன் பத்திரத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வழக்கின்படி 28,500/- காசோலை மூலமாகவும் பணம் ரூபாய் ஒரு லட்சம் ரொக்கமாகவும் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கடன் பத்திரம் இரண்டாவது பக்கத்தில் 1,30,000/- ரொக்கமாக பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே மேற்படி சங்கதிகள் காதுடன் முரண்பட்டு காணப்படுவதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி கடன் பத்திரம் என்னால் அவசரகதியில் தயாரிக்கப்பட்டதால் தான் வழக்காவணத்தோடு தொடர்பில்லாமல் முரண்பட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. மேற்படி கடன் பத்திரத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல. 7.12.2019 ஆம் தேதி எனது வங்கிக் கணக்கில் எவ்வளவு தொகை இருந்திருக்கும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் வழக்கில் சொல்லி உள்ளது போல் அல்ல என்றும் வட்டி தொழில் செய்து வருவதாகவும் பிரதிவாதிகள் என்னிடம் 30 ஆயிரம் கடன் கேட்டதாகவும் அதற்கு ஐந்து ரூபாய் வட்டி பிடித்தம் செய்து கொண்டு 28,500 க்கு காசோலை கொடுத்துவிட்டு தற்போது அதிக வட்டி பெற வேண்டி போலியான கடன் பத்திரம் தயார் செய்து வீண் வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாங்கள் பெற்ற 30,000 கடனை அசல் வட்டியுடன் ஒரு மாதத்திற்குள் செலுத்தி விட்டனர் என்றால் சரியல்ல. அதன் பிறகு அதிக வட்டி நான் கேட்டதாலும் பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொன்னதாலும் அதை முறியடிக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் அதிக தொகை கொடுத்திருந்தால் அதை காசோலை மூலமாக கொடுத்திருப்பேன் எனவே இந்த வழக்கு பொய் வழக்கு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.